‘பாஷ் (POSH) ஆக்ட் 2013’ - பெண்களின் பாதுகாப்பிற்கு இச்சட்டத்தை

# கழக அரசு முனைப்போடு செயல்படுத்தி வருகிறது!

## சட்டப்பேரவையில் – சமூக நலத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் விளக்கம்!



**சென்னை,மே 1 - சட்டப் பேரவையில், விவாதத்தின் போது பா.ஜ.க. உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் குறிப்பிட்டிருந்த சட்டம் ஒன்று தொடர்பாக விளக்கமளித்த சமூக நலத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், ‘Posh Act - 2013 -ஐ’ பெண்களின் பாதுகாப்பிற்கு கழக அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது - என விளக்கமாகக் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கீதாஜீவன் அளித்த விளக்கம் வருமாறு:-

உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் POSH Act, 2013-க்கு விதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை காலையில் வைத்தார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைப்படி இந்த விளக்கத்தை வழங்குகிறேன்.

இந்த POSH Act, 2013 என்பது நம்முடைய ஒன்றிய அரசின் சட்டமாகும். பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 என்பது ஒன்றிய அரசால் ஏற்படுத்தப்பட்ட சட்டம். இச்சட்டத்தின் பிரிவு 29ன்படி விதிகளை ஏற்படுத்தும் அதிகாரம் ஒன்றிய அரசிடமே உள்ளது.

POSH Act, 2013 சட்டத்தின் 29வது பிரிவு 1ன்படி *‘The Central Government may, by notification in the Official Gazette, make rules for carrying out the provisions of the Act’* என்று உள்ளது. இதே கேள்வி உயர்நீதிமன்றத்தில் எழுப்பப்பட்டப்போது, முதலில் மாநில அரசு இன்னும் விதிகளை ஏற்படுத்தப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நேற்றைய தினத்தில் நம்முடைய உறுப்பினர் அவர்கள் அந்த தீர்ப்பைப் பற்றித்தான் கூறினார்கள். இந்த கருத்து குறித்து இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது, நம்முடைய Advocate General மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் ஆஜராகி, சட்ட சரத்துக்களை எடுத்துரைத்தார். அதன் பின், 4.3.2025 அன்றைய தீர்ப்பில் பத்தி 3ல், இச்சட்டத்தின் விதிகளை ஒன்றிய அரசுதான் இயற்றிட வேண்டும் என்பதை ஏற்று, மாண்புமிகு நீதியரசர் *‘As the State Government does not have the rule making power under the POSH Act, taking into consideration of the amendments already made to the conduct and discipline rules, the service rules can be amended appropriately in the spirit of Rule 9 of Central Rules by making reference to the POSH Act’* எனத் தீர்ப்பில் தெளிவுப்படுத்தியுள்ளார்.

அதேபோல, பிரிவு 29, உட்பிரிவு 4ன்படி, மாநில அரசால் பிரிவு 8, உட்பிரிவு 4ல் மட்டுமே விதிகள் ஏற்படுத்தப்படலாம். அது எதற்காக என்றால், Grants and audit என்ற ஒரே விவரம் மட்டுமே மாநில அரசினுடைய வரையறையில் உள்ளது.

ஒன்றிய அரசு வழங்கக் கூடிய மானியத்தை உள்ளூர் குழுக்களுக்கு அமர்வுப்படி வழங்க பயன்படுத்தப்பட வேண்டும். இது வரை ஒன்றிய அரசு இதற்கான மானியத்தை வழங்கப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அதற்கான அவசியமும் ஏற்படவில்லை. 2013 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை 15,862 குழுக்கள், உள்ளகக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தற்போது, 43,753 உள்ளகக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது ஒன்றே நமது அரசு பெண்கள் பாதுகாப்பில் எவ்வளவு முனைப்போடு உள்ளது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், 38 உள்ளூர் குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளன. வட்டார அளவிலும் 1,407 nodal officersம் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு அரசு இந்தச் சட்டத்தை ’பெண்களின் பாதுகாப்பிற்காக முனைப்போடு செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் குறிப்பிட்டார்.

# ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையம் புதுப்பிக்கப்படுமா?

## சட்டப் பேரவையில் – ஆம்பூர் அ.செ.வில்வநாதன் கோரிக்கை!



சென்னை, மே 1 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது ஆம்பூர் தொகுதி உறுப்பினர் அ.செ.வில்வநாதன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு பால் வளத் துறை அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு:

**அ.செ.வில்வநாதன்:** (அ) ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

**அமைச்சர்** : ஆம்பூரிலே நிறுவப்பட்டிருந்த பால் குளிரூட்டும் நிலையம் கடந்த ஆட்சி காலத்திலே 2.12.2020 அன்று மூடப் பட்டுவிட்டது. இப்போது அதை சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ.செ. வில்வநாதன்:** இந்த ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் சொந்த இடத்தில் சொந்த கட்டடத்தில் 43 ஆண்டுகளுக்கு முன் துவங்கப்பட்டது. 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இதில் நாளொன்றுக்கு 40 ஆயிரம் லிட்டர் பால் குளிரூட்டம் செய்து, வேலூர், சென்னை ஆகிய நகரங்களுக்கு tanker lorry மூலம் அனுப்பட்டுக் கொண்டிருந்தது.

அதன் பின்பு 1999 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களின் ஆட்சியில் packet பாலும் தயார் செய்து அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. இது நமது அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று 2020 ஆம் ஆண்டில் சரிவர பால் உற்பத்தியாளர்களுக்கு குறித்த காலங்களில் பணப் பட்டுவாடா செய்யத் தவறிய காரணத்தினால், தனியாரிடம் பால் ஊற்ற ஆரம்பித்தக் காரணத்தால் மூடப் பட்டுள்ளது. எனவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை கூடுதலாக அதிகப்படுத்தி அதை புதுப்பித்துதர முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர்** : ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் 14 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. வேலூரிலிருந்து திருப்பத்தூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகு, அங்கே ஒரு யூனியன் ஆரம்பித்து பால் மிகச் சொற்பமாக வருகிறது. 19 ஆயிரம் லிட்டர்தான் வருகிறது. ஆகவே, அதையும்கூட குளிரூட்டுவதற்கு 7 குளிரூட்டும் நிலையங்கள், இப்போது 3 குளிரூட்டும் நிலையங்கள் ஆரம்பித்திருக்கிறோம். வரப்போகிறது. அதில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளிலும் ஒன்று வருகிறது.

ஆகவே, இதையெல்லாம் சரிவர, 50 ஆயிரம் லிட்டர் வந்தால்தான் ஒரு யூனியன் சிறப்பாக செயல்பட முடியும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம். DR milk என்ற அடிப்படையில் நிறைய சங்கங்கள் ஆரம்பித்து, 50 ஆயிரம் லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் வருகின்றபோது இந்த உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதை repair செய்யப்படுவதற்குரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதையும் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அ.செ. வில்வநாதன்:** அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் தொகுப்பு பால் குளிர்விப்பு மையம் வர இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதைக் குறிப்பாக ஆம்பூர் தொகுதிக்கு ஒன்று வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆவின் அலுவலகம், திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் வாடகைக் கொடுத்து இயங்கி வருகிறது. இதுநாள்வரை திருப்பத்தூரில் பாதுகாப்பு அறைகள் இல்லாத காரணத்தால், ஆம்பூர் குளிரூட்டும் நிலையம் கட்டடத்திலேயே பால் உற்பத்தி பொருட்கள் மற்றும் ice cream, வகைகள் mineral mixer தீவனம் மற்றும் தளவாட சாமான்கள் ஆகியவை பால் குளிரூட்டும் நிலையத்தில் இருப்பு வைக்கப்பட்டு, தினந்தோறும் சுமார் 45 கிலோ மீட்டர் எடுத்துச் செல்லப்படுகிறது என்பதை தெரிவித்து, இந்த அலுவலகமும், பாதுகாப்பு அறையும் ஒரே இடத்தில் இயங்க, அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

**அமைச்சர்:** இந்தமுறை மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு கொடுக்கிறோம். அதிலே ஒன்று ஆம்பூர் தொகுதிக்கு கொடுக்கப்படவிருக்கிறது. ஆனால், பால் உற்பத்தி மிகக் குறைவாக இருக்கிறது. 19,000 லிட்டர்தான் வருகிறது. அதை வேலூருக்கும், மற்ற ஊர்களுக்கும் அனுப்பப்படுகிறது. மிக நீண்ட தூரம் கொண்டு செல்லப்படுவதால் பால் புளிப்புத் தன்மை அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே, இதையெல்லாம் சரிசெய்துதான் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மூன்று குளிரூட்டும் நிலையங்களும் தொடங்கிய பிறகு, repair செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, அந்த அடிப்படையிலே செயல்படுத்த முடியும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றியம், அணிக்கடவு ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் அழகம்மாள் கருப்புசாமி இல்ல திருமண விழாவில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். இதில் வடக்கு ஒன்றியச் செயலாளர் அணிக்கடவு ச.கிரி உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கழக ஆட்சியில் சிலைகள் மீட்பு!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!



சென்னை, மே 1 - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 28.03.2025 அன்று காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மானியக் கோரிக்கையின் போது வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ்.மணியன் சிலைகள் மீட்பு குறித்து பேசியதற்கு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலளித்தார். அது வருமாறு:-

உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு சிலைகள் எவ்வளவு மீட்கப்பட்டுள்ளது என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

07.05.2021 முதல் 31.03.2025 வரையில் 236 உலோக சிலைகள் இந்த திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் மீட்கப்பட்டுள்ளது.

அதுபோல் 98 கற்சிலைகள், 11 மரச்சிலைகள், 72 கலைப்பொருட்கள் உள்ளிட்ட மொத்தம் 437 சிலைகள் மற்றும் கலைப் பொருட்கள் முதலமைச்சர் அவர்களின் கையில் இருக்கின்ற காவல்துறை தான் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு மீட்டிருக்கிறது என்பதை பேரவைத்தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.


